**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**முன்னிலை : திருமதி. கா. பாரதி , M.L.,**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

**2024 ஆம் ஆண்டு மார்ச் ஜூன் மாதம் 21 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**இ.ம.எண். 5/2024**

**இன்**

**அ.வ.எண். 110/2010**

த. பூவேந்தன் ----- மனுதாரர் /வாதி

/எதிர்/

1. சக்திவேல் (இறப்பு)
2. எஸ். மாலதி
3. எஸ். பிரியங்கா
4. மைனர் எஸ்.ஹர்சினி
(மேற்படி மைனர் 4-ம் பிரதிவாதிக்கு தாயாரும்
கார்டியனுமான 2-ம் பிரதிவாதி எஸ்.மாலதி மூலம்) ----- எதிர்மனுதாரர்கள்/1,2,3,4 பிரதிவாதிகள்

5. எஸ். ரவி --- புதிய தரப்பினர்/5-ம் பி ர திவாதி

இந்த மனுவானது 13.06.2024 ஆம் தேதியன்று என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் R.கிருஷ்ணன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் M. முகம்மதுயூசுப்ராஜா அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

மனுவில் கண்ட விபரங்களின்படி அசல் வழக்கை திருத்தம் செய்து மேல்நடத்த உத்திரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் ஆர்டர் 6 ரூல் 17, 18 மற்றும் பிரிவு 151-ன்படி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. மனுதாரர்/வாதி தரப்பில் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டின் சுருக்கம்:-</u>**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி. ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கானது நிலுவையில் இருந்த போது 7.6.2007 அன்று 1ம் பிரதிவாதி இறந்து விட்டதால் அவரது வாரிசுகளை சேர்த்து வழக்கானது நடத்தப்பட்ட நிலையில் 2, 3, 4 பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள்.

எதிர்வழக்குரையில் அவர்கள் பொய்யான தகவல்களைத் தெரிவித்துள்ளார்கள். கடந்த 8.6.2016 அன்று வழக்கு சொத்தையும் சேர்த்து ரவி என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி கிரையம் வழக்கானது நிலுவையில் இருக்கும் போது ஏற்பட்ட கிரையம் ஆகும். எனவே மேற்படி ரவி என்பவரையும் தரப்பினராகச் சேர்த்து அசல் வழக்கை நடத்த வேண்டியது அவசியமாகும். இதனால் மேலும் பல வழக்குகள் உற்பத்தி ஆவதை தடுக்க முடியும். அதற்காக அவரை தரப்பினராகச் சேர்த்து வழக்கை நடத்த தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.4/2024 மனுவானது இந்நீதிமன்றத்தால் கடந்த 1.4.2024 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே அது குறித்து வழக்கின் குறுந்தலைப்பு, நெடுந்தலைப்பு, வழக்கு மூலம் ஆகியவற்றில் திருத்தம் செய்ய இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3. 2 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள்/2 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் பின்வருமாறு:-</u>

மனுவானது பொய்யானது, நிலைநிற்கத்தக்கதல்ல. அசல் வழக்கானது 2010 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட நிலையில் 13 வருட காலமாக நிலுவையில் இருந்து வருகிறது. வாதி அசல் வழக்கில் விசாரணை நடத்தாமல் கால தாமதம் ஏற்படுத்தும் நோக்கத்துடன் மனுவைத் தாக்கல் செய்துள்ளார். 8.6.2016 அன்று கிரையம் ஏற்படுத்திக் கொடுத்த பிறகு 8 ஆண்டுகள் கழித்து மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மேற்படி பரிகாரம் காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பரிகாரத்தை திருத்த இயலாது. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. இந்த மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால், இந்த மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

<u>6. தீர்வு:-</u>

6.1. மனு எதிருரை மற்றும் வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் தரப்பில், ரவி என்பவருக்கு வழக்குச் சொத்தை விற்று விட்டதாக 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், அவரைத் தரப்பினராகச் சேர்க்க தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.4/2024 கடந்த 01.04.2024 அன்று அனுமதிக்கப்பட்டது என்றும், இது குறித்து வழக்குரையில் திருத்தம் செய்யவேண்டுமென்றும் வாதிடப்பட்டது.

6.2. எதிர்மனுதாரர் தரப்பில் ரவி என்பவருக்கு கிரையப் பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டு 8 ஆண்டுகள் ஆகிவிட்டதால், காலவரையறையால் மேற்படி

பரிகாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து மனுவைத் தள்ளுபடி செய்யக்கோரி வாதிடப்பட்டது.

6.3. எவ்வாறிருப்பினும், ரவி என்பவருக்கு வழக்குச் சொத்து கிரையம் செய்யப்பட்டுள்ள நிலையில் அவரைத் தரப்பினராகச் சேர்க்க தாக்கல் செய்யப்பட்ட மனுவானது இந்நீதிமன்றத்தால் 01.04.2024 அன்று அனுமதிக்கப்பட்ட நிலையில் அதற்கான திருத்தம் செய்வது சரியானது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

7. முடிவாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் ஒப்பெழுதப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 21 ஆம் நாளாகிய இன்று பகரப்பட்டது.

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2024.06.24 18:11:15 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**பழனி.**

**<u>மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** :

**இல்லை**

**எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:**

**இல்லை**

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2024.06.24 18:11:21 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**பழனி.**